பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**11 12 2025 THURSDAY 7.15 PM**

ஆகாஷவாணி

***தலைப்புச் செய்திகள்***

1. தென்கிழக்கு ஆசியாவுடனான இந்தியாவின் உறவுகளுக்கு மணிப்பூர் நுழைவு வாயிலாக திகழ்கிறது என்று குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு கூறியுள்ளார்.

2. செம்மரத்தை பாதுகாப்பதற்கும், விவசாயிகளின் வாழ்வாதாரத்திற்கும் தமிழகம் உள்ளிட்ட ஐந்து மாநிலங்களுக்கு ஆறு கோடியே 20 லட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளதாக மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகம் தெரிவித்துள்ளது.

3. நாடுமுழுவதும் இதுவரை 4 கோடியே 93 லட்சம் ஸ்மார்ட் மீட்டர்கள் பொருத்தப்பட்டுள்ளதாக மத்திய அமைச்சர் திரு. மனோகர் லால் கூறியுள்ளார்.

4. பங்களாதேஷில் அடுத்த ஆண்டு பிப்ரவரி மாதம் 12-ஆம் தேதி பொதுத்தேர்தல் நடைபெறவுள்ளது.

5. இந்தியாவுக்கு எதிரான இரண்டாவது டுவென்டி - டுவென்டி கிரிக்கெட் போட்டியில் தென்னாப்பிரிக்கா முதலில் பேட் செய்து வருகிறது.

-- இனி விரிவான செய்திகள் ---

<<<<<>>>>>>

தென்கிழக்கு ஆசியாவுடனான இந்தியாவின் உறவுகளுக்கு மணிப்பூர் நுழைவு வாயிலாக திகழ்கிறது என்று குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

மணிப்பூர் தலைநகர் இம்பாலில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், நாட்டின் வளர்ச்சியில் மணிப்பூர் முக்கிய பங்காற்றி வருவதாக குறிப்பிட்டார்.

விளையாட்டு, ராணுவம், கலை கலாச்சாரம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் மணிப்பூர் மக்கள் நாட்டின் வளர்ச்சிக்கு உதவி வருவதாக அவர் தெரிவித்தார்.

மணிப்பூர் மக்களின் கலாச்சாரம் தொன்மை சிறப்பு மிக்கது என்றும் அவர் கூறினார்.

தாம் தொடங்கிவைக்க உள்ள பல்வேறு நலத்திட்டங்கள் மூலம் மணிப்பூர் மக்களின் வாழ்க்கைத் தரம் மேலும் உயரும் என்றும் அவர் தெரிவித்தார்.

மணிப்பூர் மாநிலத்தில் போக்குவரத்து கட்டமைப்பு, கல்வி வளர்ச்சி ஆகியவற்றுக்கு மிகுந்த முக்கியத்துவம் அளித்து மத்திய அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதாகவும் திருமதி திரௌபதி முர்மு கூறினார்.

<<<<<>>>>>>

செம்மரங்களின் பாதுகாப்பிற்கும், விவசாயிகளின் வாழ்வாதாரத்திற்கும் தமிழகம் உட்பட ஐந்து மாநிலங்களுக்கு ஆறு கோடியே 20 லட்சம் ரூபாயை தேசிய பல்லுயிர் பெருக்க ஆணையம் வழங்கியுள்ளது.

இதுதொடர்பாக, மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், இரண்டு கோடியே 98 லட்சம் ரூபாய் தமிழகத்திற்கும், ஒரு கோடியே ஐந்து லட்சம் ரூபாய் கர்நாடகாவிற்கும், 69 லட்சம் ரூபாய் மகாராஷ்ட்ராவுக்கும், ஒரு கோடியே 10 லட்சம் ரூபாய் ஆந்திரப்பிரதேசத்திற்கும், 17 லட்சத்து 80 ஆயிரம் ரூபாய் தெலங்கானாவிற்கும் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்காக, இதுவரை 101 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளதாக அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

<<<<<>>>>>>

தேர்தல் சீர்திருத்தம் தொடர்பான விவாதம் இன்று மாநிலங்களவையில் தொடங்கியது.

காங்கிரஸ் உறுப்பினர் திரு அஜய் மக்கென், விவாதத்தை தொடங்கிவைத்து பேசுகையில், தேர்தலின்போது கண்காணிப்பதற்காக

வாக்குச்சாவடிகளில் நிறுவப்பட்டுள்ள சி சி டி வி பதிவுகளை தேர்தல் ஆணையம் வெளியிடுவதில்லை என்று கூறினார்.

ஜனநாயகத்தின் தாய் என்று போற்றப்படும் இந்தியாவில் தேர்தல் நடைமுறைகளை நம்பகத்தன்மையுடன் மேற்கொள்ள வேண்டிய பொறுப்பு தேர்தல் ஆணையத்துக்கு உள்ளதாக அவர் தெரிவித்தார்.

கடந்த 2024-ஆம் ஆண்டுமக்களவைத் தேர்தலுக்குமுன் வருமான வரி தாக்கலை காரணம் காட்டி, காங்கிரஸ் கட்சியின் வங்கிக் கணக்குகள் முடக்கப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

இந்த விவாத்தில் பங்கேற்ற பிஜேபி உறுப்பினர் திரு சுதான்ஷு திரிவேதி, காங்கிரஸ் ஆட்சியில் இருந்தபோது தேர்தல் சீர்திருத்த நடவடிக்கைகளுக்கு எவ்வித முக்கியத்துவமும் அளிக்கப்படவில்லை என்று குற்றம் சாட்டினார்.

காங்கிரஸ் ஆட்சியில்தான் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் நடைமுறைக்கு வந்ததாகவும், அதை பற்றி குறை சொல்ல அக்கட்சியினருக்கு எவ்வித தார்மீக உரிமையும் இல்லை என்றும் திரு சுதான்ஷு திரிவேதி கூறினார்.

திமுக உறுப்பினர் திரு என் ஆர் இளங்கோ பேசுகையில், மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்தில் பல பிரச்சினைகள்

இருப்பதாகவும், நாட்டில் முழுவதும் பாதுகாப்பான தேர்தல் கட்டமைப்பு இல்லை என்றும் குற்றம் சாட்டினார்.

தேர்தல் மீதான நம்பிக்கை சந்தேகத்திற்கு இடமில்லாத வகையில் இருக்க வேண்டியது அவசியம் என்றும் அவர் தெரிவித்தார்.

ஆம் ஆத்மி கட்சியின் திரு சஞ்சய் சிங் பேசுகையில், வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணிகள் வாக்காளர்களை பட்டியலில் இருந்து நீக்கும் நோக்கிலேயே செயல்படுத்தப்படுவதாக அவர் கூறினார்.

<<<<<>>>>>>

நாடுமுழுவதும் இதுவரை **4** கோடியே **93** லட்சம் ஸ்மார்ட் மீட்டர்கள் பொருத்தப்பட்டுள்ளதாக மத்திய மின்துறை அமைச்சர் திரு. மனோகர் லால் கூறியுள்ளார்

மாநிலங்களவையில் இன்று கேள்வி ஒன்றுக்கு எழுத்து மூலம் பதிலளித்த அவர், இதில் ஒரு கோடியே **60** லட்சம் ஸ்மார்ட் மீட்டர்கள் முன்கூட்டியே பணம் செலுத்தும் முறையில் இயங்கி வருவதாக தெரிவித்தார்.

சீரமைக்கப்பட்ட மின்விநியோக திட்டத்தின் கீழ், **20** கோடி ஸ்மார்ட் மீட்டர்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளதாக கூறிய அவர்,

இத்தகைய 4 கோடி ஸ்மார்ட் மீட்டர்கள் பொருத்தப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.

அரசு அலுவலகங்கள், வணிக, தொழில் நிறுவனங்கள் உயர்அழுத்த மின்சாரத்தை பயன்படுத்துவோருக்கு முன்கூட்டியே பணம் செலுத்தும் முறையிலான ஸ்மார்ட் மீட்டர்கள் வழங்கப்படவுள்ளதாக திரு. மனோகர் லால் கூறினார்.

<<<<<>>>>>>

கடந்த ஆண்டில் இந்தியாவிற்கு வருகை தந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை சுமார் ஒரு கோடியை எட்டியுள்ளதாக மத்திய சுற்றுலாத்துறை அமைச்சர் திரு கஜேந்திர சிங் ஷெகாவத் தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவையில் கேள்விநேரத்தின்போது இதனை தெரிவித்த அவர், இதன்மூலம் இரண்டு லட்சத்து 93 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு அந்நிய செலாவணி வருவாய் ஈட்டப்பட்டிருப்பதாக கூறினார்.

அதிபட்சமாக அமெரிக்காவிலிருந்து 18 லட்சத்திற்கும் மேற்பட்ட சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

கடந்த நவம்பர் இறுதி வரையிலான ஓராண்டு காலக்கட்டத்தில் **31** லட்சத்து **74** கோடி மின்னணு விசாக்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

<<<<<>>>>>>

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணிகளை நீட்டித்து தேர்தல் ஆணையம் இன்று உத்தரவிட்டுள்ளது.

இதன்படி, தமிழகத்திலும், குஜராத்திலும் கணக்கீட்டுப் படிவங்களை வரும் **14-**ஆம் தேதிவரை வழங்கலாம் என்றும், வரைவு வாக்காளர் பட்டியல் வரும் **19-**ஆம் தேதி வெளியிடப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மத்தியப்பிரதேசம், சட்டீஸ்கர் மற்றும் அந்தமான் நிக்கோபாரில் கணக்கீட்டுப் படிவங்களை வரும் **18-**ஆம் தேதிவரை வழங்கலாம் என்றும், வரைவு வாக்காளர் பட்டியல் வரும் **23-**ஆம் தேதி வெளியிடப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

உத்தரப்பிரதேசத்தில் கணக்கீட்டுப் படிவங்களை வரும் **26-**ஆம் தேதிவரை வழங்கலாம் என்றும், வரைவு வாக்காளர் பட்டியல் வரும் **31-**ஆம் தேதி வெளியிடப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<>>>>>>

இவ்வாண்டு ஜனவரி மாதம் முதல், ரயில் டிக்கெட் முன்பதிவிற்கு 3 கோடிக்கும் மேற்பட்ட சந்தேகத்திற்கு இடமான தனிநபர் இணையதள கணக்குகள் பயன்படுத்தப்பட்டது தெரியவந்துள்ளதாக ரயில்வே அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்

மக்களவையில் கேள்விநேரத்தின்போது இதனை தெரிவித்த அமைச்சர், ரயில் டிக்கெட் முன்பதிவிற்கான இணையதளம் தொழில்நுட்ப ரீதியாக மிகவும் பாதுகாப்பானது என்று கூறினார்.

முன்பதிவு கட்டமைப்பை வலுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளையும் ரயில்வே எடுத்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

ஆன்லைன் தட்கல் முன்பதிவில் ஆதார் அட்டையை ஓ டி பி மூலம் சரிபார்க்கும் புதிய நடைமுறை கொண்டுவரப்பட்டு உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

322 ரயில்களுக்கான முன்பதிவு ஆதார் ஓ டி பி முறையில் நடைபெற்று வருவதாகவும் அவர் மேலும் கூறினார்.

ஆன்லைன் மூலமான தட்கல் முன்பதிவில் 65 சதவீதம் டிக்கெட்டுகள் வரை பயணிகளுக்கு கிடைக்க வழி ஏற்பட்டுள்ளதாகவும் திரு அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார்.

<<<<<>>>>>>

நாட்டின் சாலை கட்டமைப்பை வலுப்படுத்துவதில் அரசு முன்னுரிமை செலுத்தி வருவதாக மத்திய சாலை மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் திரு. நிதின் கட்கரி கூறியுள்ளார்.

மக்களவையில் எழுத்து மூலம் இதனை தெரிவித்துள்ள அவர், அண்டை நாடுகள், மாநிலங்கள் மற்றும் துறைமுகங்களை இணைக்கும் சாலைகளின் தரம் உயர்த்தப்பட்டு வருவதாக குறிப்பிட்டார்.

தமிழகத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் நெடுஞ்சாலை மேம்பாட்டுத் திட்டங்களுக்கு 9 ஆயிரத்து 7 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

<<<<<>>>>>>

பங்களாதேஷில் அடுத்த ஆண்டு பிப்ரவரி மாதம் 12-ஆம் தேதி பொதுத்தேர்தல் நடைபெறவுள்ளதாக அந்நாட்டு தலைமை தேர்தல் ஆணையர் திரு நசீருதின் தெரிவித்துள்ளார்.

பங்களாதேஷ் மக்களிடையே இன்று உரையாற்றிய அவர், ஜனநாயக முறையில் வெளிப்படையான மற்றும் நேர்மையாக தேர்தல் நடத்த தயாராக இருப்பதாக கூறினார்.

பங்களாதேஷ் பிரதமராக இருந்த திருமதி ஷேக் ஹசீனா அப்பதவியிலிருந்து நீக்கப்பட்ட பிறகு நடைபெறும் முதல் பொதுத்தேர்தல் இதுவாகும்.

<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

இந்தியாவுக்கு எதிரான இரண்டாவது டுவென்டி டுவென்டி கிரிக்கெட் போட்டியில் தென்னாப்பிரிக்கா முதலில் பேட் செய்து வருகிறது.

சண்டிகரில் நடைபெற்றுவரும் இப்போட்டியில், டாஸ் வென்ற இந்தியா முதலில் பந்து வீச தீர்மானித்தது.

இதனையடுத்து பேட் செய்துவரும் தென்னாப்பிரிக்கா சற்றுமுன்வரை **3** ஓவரில் விக்கெட் இழப்பின்றி **38** ரன் எடுத்துள்ளது.

--------------------

ஒடிசா மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Tarun Mannapalli, Tanya Hemanth, Tanvi Sharma, Anmol Kharb** ஆகியோர் காலிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

<<<<<**END**>>>>>>